<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>

<u>**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**</u>

**OS.No:** 22/2015 நாள் 21.11.2025.

வாசா.1, திரு.குருசாமி

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 3, 4, 16 முதல் 18 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்குரையில் நான் இரண்டு அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளேன். பிராது 1ம் அயிட்ட சொத்தில் பத்திரகாளிஅம்மன் கோவில் உள்ளது .அதன் டவுண் சர்வே எண்.54. பிராது 1ம் தபசில் அயிட்ட சொத்திற்குரிய நான்குமால்களை பற்றி சொல்லவில்லை என்றால்சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் சுமார் 15 சென்ட் இருக்கும்.கோவில் மற்றும் சுற்றியுள்ள பிரகாரம் சேர்த்து தான் 15 சென்ட். கோவிலின்தென்பக்கமும் மேல்பக்கம் பாதியில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். பிராது 1வதுஅயிட்ட சொத்தானது வனிகவைசிய சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்ககூடிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். பிராது 1ம் அயிட்ட சொத்திற்கு வடகே பிராது 2ம் அயிட்ட சொத்துஎன்றால் சரிதான். அதுடவுண் சர்வே எண்.53ல் உள்ளது. பிராது 2ம் அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் சுமார் 11 சென்ட் இருக்கும். பிராது 2ம்அயிட்ட சொத்திற்கு எங்கள் பெயரில் பத்திரம் இல்லை என்றும் பட்டாவும் இல்லை என்று சொன்னால் பத்திரம் இல்லை பட்டா உள்ளது. எங்கள் சமுதாயத்திற்கு பிராது 2ம் அயிட்ட சொத்திற்கு பட்டா எந்த ஆண்டு கொடுத்தார்கள் என்று கேட்டால் பட்டா கொடுத்த ஆண்டு தெரியவில்லை 1928ம் ஆண்டில் இருந்தே பிராது 2ம் அயிட்ட சொத்தில் 2 செக்குகளை ஓட்டுவதற்கு நாங்கள் அனுமதி வாங்கி ஓட்டிவருகிறோம்.தாவா 2ம் அயிட்ட சொத்திற்குரிய பட்டா எண் எனக்கு தெரியாது. 1928ம் ஆண்டு நாங்கள் பஞ்சாயத்து யூனியன் போர்டில் இருந்து பிராது 2ம் அயிட்ட சொத்தில் இரண்டு செக்குகளை ஓட்டுவதற்கு அனுமதி வாங்கியிருந்தோம். நான்அதற்கான உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருந்தேன். பிராது 1ம் அயிட்ட சொத்திற்கு தெற்கே ஒரு 3ம் நபருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. அதற்கு தெற்கே தான் முடங்கியார் ரோடு என்றால் சரிதான். அந்த முடங்கியார் ரோட்டில் இருந்து 1ம் அயிட்ட சொத்திற்கு மேற்கே ஒரு தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான். அந்ததென்வடல் பாதையின் அகலம் 20 அடி என்று சொன்னால் 15 அடி இருக்கும். அந்த தென்வடல் பாதையானது தொடர்ந்து பிராது 2ம் அயிட்ட சொத்திற்கு வந்து தொடர்ந்து வடக்கே கவிமணிதேசியவிநாயகம் பிள்ளை தெருவிற்கு செல்கிறது என்றால் சரிதான். கோவிலுக்கு மேற்கே உள்ள தென்வடல் பாதையில் பேவர் பிளாக் கல் போட்டு பாதை உள்ளது என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்து முழுவதிலும் மேற்படி பேவர் பிளாக் கல் போட்டு பாதை அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சுமார் 2 அடி அகலத்திற்கு போட்டார்கள் அப்போது பிராது 2ம்அயிட்ட சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னதால் அதற்கு மேல் பேவர் பிளாக் கல் போட்டு பாதை போடவில்லை. மேற்படி 2 அடி அகவலத்திற்கு பேவர் பிளாக் கல் போட்ட இடத்திற்கும் கிழக்கே பாதை உள்ளது என்றால் பாதை இல்லை அது எங்களுக்குரிய மண் பொட்டலாக உள்ளது. பிராது 2வது அயிட்ட சொத்தில் இராஜபாளையம் நகராட்சியில்இருந்து போர்போட்டு சின்டெக்ஸ் தொட்டி அமைத்துள்ளார்கள் என்றால் எங்கள் கோவிலுக்காக தான் இராஜபாளையம் நகராட்சியில் இருந்து போட்டுக்

கொடுத்துள்ளார்கள். கோவிலுக்காக போட வேண்டும் என்று சொல்லி நாங்கள் மனு கொடுக்கவில்லை நகராட்சினரே வந்து மேற்படி சின்டெக்ஸ்தொட்டி அமைத்தார்கள். சின்டெக்ஸ் தொட்டி வைத்து இன்றில் இருந்து சுமார் 10 ஆண்டு காலம் இருக்கும். பிராது 2ம் அயிட்ட சொத்தில் மேற்படி சின்டெக்ஸ் தொட்டி அமைப்பதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்தோமா என்று கேட்டால் எங்கள் நிலத்தில் கோவிலுக்காக போட்டதால் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. பிராது 2வது அயிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் 14 ம் எதிர்வாதியான இராஜபாளையம் நகராட்சியானது சின்டெக்ஸ் வைத்தார்கள் என்றால் அது சரியல்ல. பிராது 2ம் அயிட்ட சொத்தில் தெருவிளக்கு உள்ளதா என்று கேட்டால் இல்லை. அதில் கழிவு நீர்வாய்க்கால் உள்ளது என்றால் அப்படியில்லை. பிராது 2ம்அயிட்ட சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் தெருவிளக்கும் கழிவுநீர் வாய்க்காலும் உள்ளது என்று நான் அதை மறைத்து சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அதுசரியல்ல. பிராது 2ம்அயிட்ட சொத்தில் 1 முதல் 13, 16 முதல் 18 எதிர்வாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக நான் சொல்லும்போது அவர்கள் எவ்வளவு பரப்பளவில் ஆக்கிரமிப்புகளை செய்துள்ளார்கள் என்று கேட்டால் எனக்கு தற்போது அளவுகள் பற்றி சரியாக தெரியவில்லை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். பிராது 2ம் அயிட்ட சொத்தில் யார் யார் எவ்வளவு பரப்பளவை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் னஎன்பதை பார்த்து தெரிவிக்கும்படி நாங்கள் இராஜபாளையம் நகராட்சிக்கு மனு கொடுத்திருந்தோம் என்றால் சரிதான். அந்த மனுவை நாங்கள் தாக்கல் செய்திருந்தோம் என்றால் எனக்கு முன்பு இருந்த நிர்வாகஸ்தர்கள் தாக்கல் செய்திருப்பார்கள். எனக்கு முன்பு இருந்த நிர்வாகஸ்தர்கள் அந்த மனுவின் நகலை என்னிடத்தில் ஒப்படைத்தார்களா என்று கேட்டால் இல்லை. நகராட்சியினர் வந்துஅளந்து பார்வையிட்டு மொத்தம் உள்ள பரப்பளவில் யார் யார் எவ்வளவு பரப்பளவில் ஆக்கிரமிப்புகளை செய்துள்ளா்ர்கள்என்று சொல்லி ஒரு அறிக்கையை கொடுத்திருப்பார்கள் என்றும் இந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என் று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சர்வேயர் அளந்துகொடுத்த அறிக்கை படி நான் பிராதில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால எங்கள் பட்டா வில் உள்ள அளவு படி எதிர்வாதிகள் ஆக்கிரமிப்புகளை செய்துள்ளதாக சொல்லியுள்ளேன். எங்களுக்கு வழங்கப்பட்ட பட்டாவில் யார் யார் எவ்வளவு பரப்பளவை ஆக்கிரமிப்பு செய்துள்ளா்ர்கள் என்று சொல்லியிருக்குமா என்று கேட்டால் மொத்தமுள்ள அளவை தா்ன பட்டாவில் சொல்லப்பட்டுள்ளது ஆக்கிரமிப்பு அளவுகளை பற்றி அதில் சொல்லவில்லை. நாங்கள்இந்த வழக்கை தாக்கல் செய்த காலத்தில் 2,3,4,7 எதிர்வாதிகள் ஆக்கிரமிப்புகளை செய்திருப்பதாக கூறியுள்ள அளவுகளை நான் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் நகராட்சியில இருந்து அளந்து வந்து சொன்னார்கள் அதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன். நகராட்சியனர் எந்த தேதியில் வந்து அளந்தா்ர்கள் என்றுஎனக்கு தேதி ஞாபகமில்லை. இன்ன இன்னார் இவ்வளவு அளவில் ஆக்கிரமிப்பை செய்துள்ளார்கள் என்று சொல்லி நகராட்சியினர் எங்கள் சமுதாயத்திற்கு ஒரு அறிக்கையை கொடுத்திருந்தார்கன்ள என்றால் ஆமாம். அந்த அறிக்கையை பார்த்தால்யார் யார் எவ்வளவு பரப்பளவை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியவரும் என்றும் அந்த அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் தாக்கல் செய்துள்ளேன். இராஜபாளையம்

நகராட்சியில் இருந்து சர்வேயர் வந்து அளந்த போது எதிர்வாதிகளின் வீட்டை அளந்தார்களா என்று கேட்டால் எதிர்வாதிகள் வீட்டை அளக்கவில்லை வீட்டின் வெளியிலும் சுற்றிலும் அளந்தார்கள்.

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சி இருதரப்பு வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 21st day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.